ஓமாத்தூர் பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி அதிகமாக நீர் வரும்போது, கீழேயுள்ள அணைகள் பகுதிகளில் ஏற்கனவே உள்ளவர்கள் பாதிக்கப்படாமல் அந்த நீரை விடுவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இப்படி அணைகளுடைய கொள் அளவை அதிகப்படுத்தும் போது சில பிரச்னைகள் வந்து விடுகின்றன. ஏற்கனவே, இருக்கக்கூடிய மண்களை அப்புறப்படுத்தி, டீ-சில்ட் செய்து கொள்ளளவை அதிகப்படுத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறபடி, எந்தவிதமான பாதிப்பும் வராது என்பது உண்மை. ஆனால், பொருளாதாரத்தை கணக்கில்கொண்டு, அந்த அணையினுடைய கொள்ளளவை விரிவுபடுத்தும் திட்டமாக இல்லாமல், அதை உயர்த்துவது என்று முடிவெடுத்திருக்கிறோம். அதனால், கீழ்ப்புறத்திலுள்ள ஆயக்கட்டுகளுக்குப் பாதிப்பு வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று அரசு அவர்களுக்கு ஆலோசனை சொல்லியிருக்கிறது.

சோழபுரம் பிர்க்காவில் கிடைக்கும் சுண்ணாம்பு கற்கள்

*வினா எண். 37— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் தாலுகா, சோழபுரம் பிர்க்காவில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் கிடைக்கும் சுண்ணாம்பு கற்களை அரசு அனுமதி இல்லாமல் திருட்டுத்தனமாக எடுத்து சில தனியார் தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்துவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இராமநாதபுரம் மாவட்டம், இராசபாளையம் வட்டம், சோழபுரம் பிர்க்காவில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ள சுண்ணாம்பு கற்களை அரசு அனுமதி இல்லாமல் யாரும் திருட்டுத் தனமாக எடுக்கவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

[முற்பகல் 10–00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

1981 ஆகஸ்ட் 24]

திரு. இரா. தாமரைக்கனி : அரசுக்குச் சரியான முறையில் புகார் வராமல் இருந்திருக்கலாம். என்னுடைய ஊருக்குப் பக்கத்து ஊராக இருக்கும் காரணத்தால் எனக்கு நல்ல முறையில் தெரியும். பந்தல்குடி என்ற இடத்தில் 100 ஏக்கர் நிலம் அரசுப் புறம்போக்காக இருக்கிறது. அங்கே அனுமதி வாங்காமல் சாயத் தொழிற்சாலையைச் சேர்ந்தவர்களும், துலுக்கப்பட்டு சிமென்ட் ஆலையைச் சேர்ந்த தனியார்களும் சுண்ணாம்புக் கற்களை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா? மீறி அவர்கள் எடுத்தால் அவர்களுடைய லைசன்ஸ் ரத்து செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : அங்கேயிருந்து அனுமதி இல்லாமல் எடுத்துச் செல்வதாக அரசுக்குத் தகவல் இல்லை. திரு. தாமரைக்கனி அவர்கள் சொல்வது போல் அவருக்கு அவ்வாறு எடுத்துச் செல்வது தெரிந்து நடந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொன்னால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : சோழபுரம் பந்தல்குடியில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தைக் கண்காணிக்க சரியான போலீஸ் பந்தோபஸ்து கொடுத்து காவல்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : அங்கே இருக்கிற சிமென்ட் தொழிற்சாலைக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் தனியார் வந்து சுண்ணாம்புக்கல்லை எடுத்துச் செல்லாமல் ஆலை நிர்வாகிகள் காவல்களைக் கொண்டு அந்த இடங்களைப் பாதுகாத்து வருகிறார்கள். அந்தப் பகுதியில் குறிப்பிட்ட இடங்களில் சுண்ணாம்புக் கல் வெட்டி எடுக்க தனியாரும் உரிமை பெற்றிருக்கிறார்கள். கிருஷ்ணராஜா என்பவர் உரிமை பெற்று வெட்டி எடுக்கிறார்கள். அனுமதியோடு வெட்டி எடுப்பதைத் தடுக்க முடியாது.

தனியார்கட்கு கனிவளம் தோண்டி எடுப்பதற்கான உரிமம்

*வினா எண் 38—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கனிவளம் தோண்டி எடுக்கும் (Mining Lease Licence) உரிமை தனியார்கட்கு கொடுப்பதை அரசு நிறுத்தியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

(இ) அரசே ஏற்றுநடத்த உத்தேசம் உண்டா?

TRUTH ALONE TRIUMPHS